**02.09.2025**

**CC No.77/2020**

**அ.சா.1 – மூக்கையா, த/பெ.ரெங்கசாமி**

**எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்**

**இந்நீதிமன்ற சி.எம்.பி.எண்.410/2025 ல் கடந்த 12.08.2025 ல் ஏற்பட்ட உத்தரவின் பேரில் அ.சா.1 திரும்ப அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

ஆஜர் எதிரியின் அப்பா எனக்கு அண்ணன் முறை. போலீசார் மருத்துவமனையில் என்னிடம் சம்பவத்தை பற்றி கேட்டார்கள். நான் நடந்ததை கூறினேன். அதில் என்ன எழுதினார்கள் என்று தெரியாது. நீதிமன்ற விசாரணைக்கு வந்த பிறகு தான் அதில் என்ன எழுதியிருந்தது என்று போலீசார் என்னிடம் சொன்னார்கள். என்னிடம் படித்து காண்பிக்கவில்லை. நான் கையெழுத்து மட்டும் செய்தேன். சம்பவத்தில் எதிரிக்கும் தலையில் காயம். நான் அவரை அடித்தது உண்மை. எதிரிக்கு தலையில் தையல் போடப்பட்டு அவரும் 6,7 நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்றால் சரிதான். எதிரி எனது மனைவியுடன் தவறான தொடர்பில் இருந்தார் என்பது தான் பிரச்சனைக்கு காரணம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த நேரம் இரவு நேரம் என்பதால் எதிரி எந்த கத்தியால் அறுத்தார் என்று தெரியாது. எதிரி கத்தியால் என் கழுத்தில் அறுக்கவில்லை என்றும், நான் எதிரியை அடித்து எதிரிக்கு காயமானதால், தப்பித்து ஓடும்போது துணிகொடிக் கம்பியில் கழுத்து மாட்டி எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையாக இருந்திருந்தால் புகார், போலீசார் விசாரணை மற்றும் நீதிமன்ற சாட்சியத்தில் ஒரே மாதிரி கூறியிருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.2 எனது மனைவி, அ.சா.3 பெரியண்ணன் எனது மாமா முறை. அ.சா.6 முருகேசன் மாமா மகன். எதிரி மீது பொய்யான புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரி எனது மனைவியுடன் பேசிக்கொண்டிருந்ததால் அந்த முன் விரோதத்தினால் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி படி ரூ.500/–ஐ பெற்றுக்கொண்டேன்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்